முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை!

அருட்பெருஞ்சோதி!!

# ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

## எதிர்காலம் குறித்த

## இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

**பிலவ வருடம் ஐப்பசி மாதம் 28ம் திகதி முதல் கார்த்திகை மாதம் 05ம் திகதி வரை (14.11.2021 ஞாயிறு முதல் 21.11.2021 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. தயவெனும் சக்தி பரவிட
   தரணிக்கு தயாபரனாக வந்த
   நேயமிக்க ஆறுமுக அரங்கனே
   ஞானியே உன் அவதாரம் கூறி
2. கூறியே அகத்தியன் யானும்
   குறிப்பாக இந்தியா தமிழகம் தன்னில்
   வருங்கால பலனாக பிலவ துலைதிங்கள் எழுநான்கு திகதிமேல்
   வளமான தேள்திங்கள் பஞ்ச திகதி வரை
3. வரையான நிகழ்வான வாரஆசியாக
   வழங்குவேன் அரங்கஞானி கேட்க
   முறையான தடுப்பு அவுசதங்கள்
   முழுமைபட பேருலகம் கண்டாலும்
4. கண்டாலும் பேரிடர் அலை
   கட்டுப்படா தொடர்ந்து வந்து
   உண்டாக்கும் பேரழிவுதன்னை
   உயிர்க்கொலை தவிர்க்காத வரை
5. வரையிலும் பேரிடர் அடங்கா
   வளர்ந்து இன்னல் கூட நேரும்
   குறைவிலா ஞானிகள் நிறைந்த
   குருமார்கள் மிகுந்த இந்தியா தமிழகம்
6. தமிழகம் நச்சுக்கிருமி வழி
   தாக்கம் இன்னும் அலையாகத்
   தொடரா வண்ணம் தடுத்திட
   தேசிகன் காட்டும் தயவுநெறியான

7. நெறியான சுத்த நெறியை
நிலவுலகினில் ஏற்று வர
வருமுலகில் பாதுகாப்பு பெருகி
வளர்ச்சிநிலை காணக்கூடும்

8. கூடவே ஆளுமைகள் தானும்
குருமார்க்கம் ஏற்று நன்கு
நாடியே மக்களிடை ஏற்றம்
நம்பிக்கைதரும் வண்ணம் செயல்பட

9. செயல்பட செயல் திட்டங்களை
சேவை முகமாக மாற்றிட
தயவான ஆளுமை மூலம்தான்
தமிழகம் இந்தியா வளரும்

10. வளரும் சகல துறைகளிலும்
வளர்ச்சியும் மாற்றமும் காணும்
வளரும் மலரும் ஞான ஆட்சியாக
வழங்கிய வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

பிலவ வருடம் ஐப்பசி மாதம் 28ம் நாள் 14.11.2021 ஞாயிற்றுக் கிழமை முதல் கார்த்திகை மாதம் 05ம் நாள் 21.11.2021 ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள நிகழ்வுகள் :

தர்மம் தாழ்ந்து நிற்கும் கலியுகத்தினில் தர்மத்தின் வலிமை அதிகரிக்க உலகமெலாம் தயவு சக்தி பரவிட வேண்டியே தயவே வடிவான தயாபரனாக அவதரித்திட்ட ஆறுமுக அரங்க மகா தேசிகனே மகாஞானியே உமது அவதாரத்தினை உலகமெலாம் எடுத்துக்கூறியே அகத்திய மகரிஷி யானும் இந்தியா தமிழகத்தில் வருங்கால பலனை கூறும் விதமாக பிலவ வருடம் ஐப்பசி மாதம் 28ம் நாள் 14.11.2021 ஞாயிற்ற கிழமை முதல் கார்த்திகை மாதம் 5ம் நாள் 21.11.2021 ஞாயிற்று கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்க விருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அரங்க மகான் கேட்க உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

உலகமெங்கும் பரவி மக்களை வதைக்கும் இயற்கை பேரிடரான நச்சுக்கிருமி தாக்குதலை எதிர்கொள்ளும் விதமாக தடுப்பு மருந்துகளை முழுமையாக இந்த உலகம் பயன்படுத்தி நோய் தாக்குதலில் இருந்து விடுபட்டாலும் நச்சுக் கிருமி தாக்குதல் கட்டுப்படாமல் மேலும் பெருகி அலைஅலையாக பரவி தொடர்ந்து

உண்டாக்கும் உயிர்பலிகளை தக்க பாதுகாப்பு முறைகளை கடைபிடித்து தவிர்க்காத வரை நச்சுக்கிருமி தாக்குதல் பெருகி துன்பங்கள் பெருகிட கூடுமப்பா.

ஆதலினாலே ஞானம் மிகுந்த ஞானிகள் மிகுந்த இந்தியா தமிழகத்தில் நச்சுக்கிருமிகள் மூலமாக உண்டாகும் பாதிப்புகள் மேலும் வளர்ந்து அலையாக தொடராத வண்ணம் தடுத்திட வேண்டுமாயின் தூயஞான நெறிகொள்கைகளை உலகிற்கு அளிக்கும் அரங்கமகானின் தயவு நெறியான சுத்த சன்மார்க்க நெறியினை உலகோர் முழுமனதோடு ஏற்று வாழ்வினில் கடைபிடித்து வந்தால் நாட்டினில் பாதுகாப்பு பெருகிடும். தேசத்தின் வளர்ச்சி அதிகரிக்கும்.

நாடு பாதுகாப்புடன் மேன்மேலும் வளர்ச்சி அடைந்திட வேண்டுமாயின் நாட்டை ஆளும் ஆளுமைகள் குருபாரம்பரியத்தினை குருமார்க்கத்தை ஏற்று குருமார்களின் ஞானத்தின் வழிமுறைகளை ஏற்று தயவுடன் மக்களிடம் நடந்திட மக்களுக்கு நம்பிக்கையுடன் செயல்பட்டு மக்களின் முன்னேற்றத்தை முதலாக கொண்டு செயல்பட வேண்டும். அரசின் செயல்பாடுகள் அனைத்தும் சேவை மனப்பான்மையுடன் நடந்திட வேண்டுமப்பா. தயவான ஆட்சி முறையினால் மட்டுமே இந்தியா தமிழகம் வளருமப்பா.

ஆளுமைகள் தயவை அடிப்படையாக கொண்ட ஆட்சியை புரிந்திட சகலவிதமான துறைகளிலும் தேசம் விரைந்து வளர்ச்சி அடையும் அற்புதமான மாற்றங்களை காணும் ஆட்சியானது ஞான ஆட்சியாக மலர்ந்து வளரும் மக்களும் சுபிட்சமான வாழ்வை பெறுவார்கள் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–